ந.க.எண்.1612/2023/ஊ.வ.2
நாள்: .04.2023

# மயிலாடுதுறை மாவட்டம்

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

## அறிவிக்கை (Notification)

### அரசுத்தலைப்பு அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

மயிலாடுதுறை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், மாவட்ட அலுவலகங்களில் அரசுத்தலைப்பில் உள்ள 13 அலுவலக உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பத்தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்கள் விவரம்**

**பதவி:** அலுவலக உதவியாளர்

**காலியிடங்களின் எண்ணிக்கை - 13**

| வ. எண் | இனசுழற்சி விபரம் | முன்னுரிமை / முன்னுரிமை அற்றவர் | முன்னுரிமை விபரம் |
|---|---|---|---|
| 1 | பொது | முன்னுரிமை பெற்றவர் | கொரோனா தொற்றிலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) |
| 2 | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | முன்னுரிமை பெற்றவர் | மகளிர் - ஆதரவற்ற விதவை |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | முன்னுரிமை பெற்றவர் | முதல் தலைமுறை பட்டதாரிகள் |
| 4 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்கள் அல்லாதோர்) | முன்னுரிமை பெற்றவர் | தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள் |
| 5 | பொது | முன்னுரிமை அற்றவர் | மகளிர் - ஆதரவற்ற விதவை |
| 6 | ஆதிதிராவிடர் | முன்னுரிமை பெற்றவர் | போரில் உடல் தகுதியினை இழந்த முன்னாள் இராணுவத்தினர் |
| 7 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | முன்னுரிமை அற்றவர் | மகளிர் - ஆதரவற்ற விதவை |

| வ. எண் | இனசுழற்சி விபரம் | முன்னுரிமை / முன்னுரிமை அற்றவர் | முன்னுரிமை விபரம் |
|---|---|---|---|
| 8 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்கள் அல்லாதோர்) | முன்னுரிமை அற்றவர் | மகளிர் - ஆதரவற்ற விதவை |
| 9 | பொதுப்போட்டி | முன்னுரிமை அற்றவர் | - |
| 10 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்கள் அல்லாதோர்) | முன்னுரிமை அற்றவர் | - |
| 11 | பொதுப்போட்டி | முன்னுரிமை அற்றவர் | - |
| 12 | ஆதிதிராவிடர் | முன்னுரிமை அற்றவர் | மகளிர் - ஆதரவற்ற விதவை |
| 13 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | முன்னுரிமை அற்றவர் | - |

<u>கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள்:</u>

1. 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்.

<u>வயது வரம்பு:</u>

<u>01.01.2023 அன்று வயது வரம்பு</u>

| வ.எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | *நிர்ணயம் செய்யப்படும் அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பொது பிரிவு | 18 | 32 |
| 2 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதோர்) | 18 | 34 |
| 3 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | | |
| 5 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 18 | 37 |

*மேற்கண்ட அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்க கூடாது.

**விண்ணப்பங்கள் பெறுவதற்கு கடைசி நாள் 12.05.2023 மாலை 5.45 மணி வரை**

**ஊதியம்:**

| வ.எண் | பணியின் விபரம் | ஊதிய விபரம் |
|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | ரூ.15700/-(ரூ.15700-50000/-) |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதிக்கு ஆதராமாக பள்ளி மாற்றுச்சான்று / மதிப்பெண் பட்டியல் நகல் சான்றொப்பமிட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
2. இருப்பிடம், சாதிச் சான்று, முன்னுரிமை சான்று ஆகிய சான்றுகள் உரிய தகுதி வாய்ந்த அலுவலரிடம் பெறப்பட்டு அதன் நகலினை சான்றொப்பத்துடன் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
3. அரசு விதிகளின்படி மேற்குறிப்பிட்ட இனசுழற்சி மற்றும் முன்னுரிமை முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
4. விண்ணப்பத்துடன் ரூ.30-க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட ஒரு அஞ்சல் உறையினை (10*4 Inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
5. வயது, கல்வித் தகுதி, இனசுழற்சி மற்றும் முன்னுரிமையற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு, நேர்காணலுக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண்.303, நிதி (ஊதியக்குழு) துறை நாள்:01.10.2017, அரசாணை எண்.305, நிதி(ஊதியக்குழு) துறை நாள்:13.10.2017 மற்றும் அரசாணை எண்.306, நிதி (ஊதியக்குழு) துறை நாள்:03.10.2017-ன்படி ஊதியம் ஒழுங்குபடுத்தப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 12.05.2023 பிற்பகல் 5.45 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ கிடைக்கப்பெறும் வகையில் அனுப்ப வேண்டும். **குறிப்பிட்ட காலநேர வரம்பினை கடந்து காலதாமதாக பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
மாவட்ட ஆட்சியரகம்
(வளர்ச்சிப்பிரிவு),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முதல் தளம்,
மயிலாடுதுறை - 609001

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் அழைப்பு கடிதம் (Call Letter) பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் mayiladuthurai.nic.in என்ற மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
(வளர்ச்சி)
மயிலாடுதுறை.

10.4.2023